# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.142/2025** |
| Deposition of witness | : | P.W.3 |
| Name | : | ஜாக்கோப் ராஜா |
| Father's /Husband Name | : | டேனியல் |
| Village | : | ஆழியன் தோப்பு, செம்பியன்கூந்தலூர் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 47 |
| Occupation | : | விவசாயி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 01st day of November 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது ஆழியன் தோப்பு செம்பியன் கூந்தலூரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பன்னீர்செல்வம் , அ.சா.2 கலாவை எனக்கு தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது உறவினர் பெண். கடந்த 16.06.2025ம் தேதி சாயந்திரம் 05.00 மணியளவில் நான் எனது தம்பி ராஜேசுடன் வீட்டு வாசலில் நின்று பேசிக்கொண்டிருந்தேன். அப்போது அ.சா.1 பன்னீர் செல்வம் வீட்டு கொல்லைக்கு போகும் வழியில் கருவை முள் போடப்பட்டிருந்தது. போற வழியில் கிடந்த முள்ளை அ.சா.1 பன்னீர்செல்வம் குனிந்து முள்ளை எடுத்தார். அப்போது ஆஜர் எதிரி முள்மீது கையை வைக்காதே குச்சிகாரி மகனே, தேவிடியா மகனே என அசிங்கமான வார்த்தைகளால் அ.சா.1ஐ திட்டினார். அப்போது ஆஜர் எதிரி மறைத்து வைத்திருந்த அரிவாளால் அ.சா.1ஐ தலையில் வெட்டினார். அதில் அவருக்கு பலமான காயம் ஏற்பட்டது. அரிவாளை காட்டி அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ பார்த்து மிரட்டினார். நானும் எனது தம்பியும் அ.சா.1க்கு ஏற்பட்ட காயத்திற்காக அ.சா.2 கலா ஆகியோருடன் ரிக்கபாண்டி என்பவரது ஆட்டோ மூலம் நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு

சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கு அவருக்கு தையல் போட்டார்கள். அ.சா.1க்கு ஸ்கேன் செய்ய வேண்டும் என்பதற்காக மேல் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இது சம்மந்தமாக எரவாஞ்சேரி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.01 13:07:29 +05'30'

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`